சீர்காழி நகராட்சி ஆணையர்(மு.கூ.பொ) அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை. திரு.அ.சங்கர்,பி.காம்.,

ந.க.எண்:2324/2023/எப்1 நாள்: 28.10.2024

பொருள்	நகரமைப்பு பிரிவு – சீர்காழி நகராட்சி எல்லைக்குட்பட்ட 50, சீர்காழி கிராமம், வார்டு–A, பிளாக்–50, TS No: 50/2 மற்றும் 50/3, RS No: 428 மற்றும் 429–ல் 19150 ச.மீ பரப்பளவில் உள்ள புதிய குடியிருப்பு மனைப்பிரிவுக்கு நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்கள் தொழில்நுட்ப அனுமதி அளிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து இம்மனைப்பிரிவினை அங்கீகரித்து இறுதி ஒப்புதல் வழங்கி உத்திரவிடல் – தொடர்பாக.
பார்வை	1. திரு.கு.சிவதேவன், த/பெ.குமார், நெ.81A, தேவராஜ் நகர், சோழிங்கநல்லூர், சென்னை அவர்களின் விண்ணப்பம் நாள்:01.04.2024 2. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், மயிலாடுதுறை அவர்களின் ந.க.எண்:1141/2023/24 (TCP) நாள்: 11.01.2024 3. தானபத்திரம் ஒப்படைப்பு பத்திர எண்: 60/2024 நாள்: 03.01.2024 4. நகர்மன்ற தீர்மான எண்:1201 நாள்:25.10.2024

உத்திரவு:

பார்வை 1–ல் காணும் மனுதாரருக்கு, பார்வை 2–ல் காணும் உத்திரவில், 50, சீர்காழி கிராமம், வார்டு–A, பிளாக்–50, TS No: 50/2 மற்றும் 50/3, RS No: 428 மற்றும் 429–ல் 19150 ச.மீ பரப்பளவில் உள்ள புதிய குடியிருப்பு மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் மயிலாடுதுறை அவர்களினால் பரிசீலிக்கப்பட்டு SWP/L.P/DTCP/Ma.Ma.No: 01/2024 ந.க.எண்:1141/2023/24(TCP) நாள்: 11.01.2024 என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், மனைப்பிரிவில் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின்படி, மனைப்பிரிவு அமைக்கப்பட்டு அடிப்படை வசதிகள் செய்து, பார்வை 3–ல் காணும் கடிதத்தின்படி, சாலைகள், பூங்கா மற்றும் பொது உபயோகங்களை நகராட்சி வசம் தானப்பத்திரம் மூலம் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி, மனைப்பிரிவிற்கான மனைப்பிரிவு அனுமதி கட்டணம் ரூ.21,500/– செலுத்துச்சீட்டு எண்: 099/001/2/23–24/0004477, நாள்: 28.03.2024 அன்று நகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டுள்ளது மற்றும் மனைப்பிரிவிற்கு மின் கம்பங்கள் மற்றும் மின் விளக்குகள் அமைக்க மின்சார வாரியத்தின் பெயரில் கனரா வங்கி, சீர்காழி கிளையில் ரூ.3,11,110/– வங்கி வரைவோலை எண்:340675, நாள்:03.06.2024 அன்று செலுத்தப்பட்டுள்ளது.

மனைப்பிரிவு பராமரிப்பு பணிகளுக்கான வைப்பு தொகையாக ஏக்கருக்கு ஒரு லட்சம் வீதம் 4.70 ஏக்கருக்கு ரூ.4,70,000 ம் நகராட்சி கருவூலத்தில் ரசீது எண்: 099/001/1/24–25/0006099 நாள் 26.10.2024 இல் செலுத்தப்பட்டுள்ளது . மேலும், மனைப்பிரிவிற்கு உண்டான மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு நகராட்சி ஆணையர் பெயரில் இந்தியன் வங்கி, தென்பாதி கிளையில் ரூ. 7,47,191/– வங்கி வரைவோலை எண்: 866474, நாள்:15.06.2024 அன்று செலுத்தப்பட்டுள்ளது.

மேற்படி, மனுதாரரின் மனைப்பிரிவிற்கு பார்வை 4–ல் காணும் இந்நகர்மன்றத்தின் அனுமதி அளிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, இப்புதிய மனைப்பிரிவில் சுடுகாடு பகுதியிலிருந்து 30மீ தொலைவிற்குள் அமைத்துள்ள மனைகளுக்கு ஆழ்துளை கிணறு (BOREWELL) அமைப்புகள் ஏதும் ஏற்படுத்தகூடாது என்றும் நகராட்சியால் வழங்கப்படும் குடிநீர் இணைப்பு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனைகளின்படி இந்நகராட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கி உத்திரவிடப்படுகிறது.

28/10/24

ஆணையர்(மு.கூ.பொ),
சீர்காழி நகராட்சி

28/10/2024

இணைப்பு:

அங்கீகரிக்கப்பட்ட வரைபடம் மற்றும் நிபந்தனைகள்

பெறுநர்:

திரு.கு.சிவதேவன்,த/பெ.குமார்,
நெ.81A, தேவராஜ் நகர்,சோழிங்கநல்லூர்,
சென்னை–600097.

நகல்:

1. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்கள்,
மயிலாடுதுறை.
2. சார்பதிவாளர், சீர்காழி –அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் உள்ள மனைகளை பத்திரபதிவு செய்திட கேட்டுக்கொள்ளப்படுகிறது.
3. வருவாய் ஆய்வாளர், சீர்காழி நகராட்சி – மேற்கண்ட மனைப்பிரிவில் உள்ள மனைகளுக்கு காலிமனைவரி விதிப்பு செய்து நடவடிக்கை மேற்கொள்ள பணிக்கப்படுகிறது.
4. உதவி கணினி திட்ட அமைப்பாளர், சீர்காழி நகராட்சி – மேற்கண்ட மனைப்பிரிவை கணினியில் பதிவேற்றம் செய்திட கேட்டுக்கொள்ளப்படுகிறது.